## உள்நாட்டு வைப்புகள், குடியிருப்போர் அல்லாதோரின் அயல்நாட்டு நாணய வைப்புகள் மீதான கடன்களுக்கான வட்டி விகிதங்கள்

**இந்திய ரிசர்வ் வங்கி**
**வங்கி நடைமுறை மற்றும் வளர்ச்சித்துறை**
**மைய அலுவலகம், மும்பை**

**DBOD. Dir.BC. 153/13.03.00/1999-2000** **மார்ச் 23, 2000**

அட்டவணையிலுள்ள அனைத்து வணிக வங்கிகள்
(பிராந்தியக் கிராம வங்கிகள் நீங்கலாக)

அன்புடையீர்,

1999 அக்டோபர் 29ஆம் தேதியிட்ட DBOD.No.Dir. BC.107/13.01.04/99 மற்றும் 108/13.01.09/99 சுற்றறிக்கைகளில் வங்கிகள் தங்களது பிராதான கடன் வட்டி விகிதத்திற்குச் சம்பந்தமில்லாமலேயே, தங்களது உள்நாட்டு வைப்புகள், குடியிருப்போர் அல்லாதோரின் அயல்நாட்டு நாணய வைப்புகள் மீதான கடன் தொகை மீதான வட்டி விகிதத்தைச் சுதந்திரமாக தீர்மானித்துக் கொள்ளலாம் என்று கூறியிருந்தோம். சில குறிப்பிட்ட நிகழ்வுகளில் குறிப்பாக ரூபாய் 2 லட்சம் வரையிலான் மூன்றாவது நபர் வைப்புக்கான வட்டி விகிதங்கள், சொந்த நபரில் வைப்புகள் மீதானவட்டியை விடக்குறைவாக விதிக்கப்படுகிறதாக அறிகிறோம். எனவே இது மறு ஆய்வு செய்யப்பட்டு சொந்த நபர் வைப்புகள் மீதான வட்டியைப்போலவே மூன்றாவது நபர் வைப்புக்கான வட்டி விகிதங்களும் பிராதான கடன் வட்டி விகிதத்திற்குச் சம்பந்தமில்லாமல் தங்கள் விருப்பம்போல் தீர்மானித்துக் கொள்ளலாம். ஆனால் மூன்றாவது நபர் வைப்புகள் மீதான ரூபாய் 2 லட்சத்திற்கும் அதிகப்பட்ட தொகைக்கு ரிசர்வ் வங்கியின் கட்டளைகள் படியே வட்டி விகிதங்கள் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

2. எனவே மார்ச் 2000, 23 ஆம் நாளிட்ட சுற்றறிக்கை DBOD.No.Dir. BC.151&152/13.03.00/1999-2000 மாற்றி அமைக்கப்படுகிறது.

3. அறிவுரைத் தொகுப்பு பாகம் 1 இல் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்கள் செய்யப்படுகின்றன.

i. ஏற்கனவே உள்ள பாரா 9. VI.1(ii) (b), இணைக்கப்பட்டுள்ள சிறுப்பகுதி எண் 10 இல் உள்ளது போல் மாற்றி அமைக்கப்படுகிறது.

ii. 9 VI.2 (ii) (b) (b) -- சிறுப்பகுதி 11 இல் உள்ளது போல்

iii. 9 VI.2 (iii) (b) (b) -- சிறுப்பகுதி 12 இல் உள்ளது போல்

கிடைத்தமைக்கு ஒப்புதல் அளிக்க்

நம்பிக்கையுள்ள

P.V. சுப்பாராவ்
தலைமை பொது மேலாளர்

**DBOD. Dir.BC. 151/13.03.00/1999-2000** மார்ச் 23, 2000

<u>வைப்புத்தொகைகள் (Deposits) மீதான வட்டி</u>

வங்கிகள் ஒழுங்குமுறைச் சட்டம் 1949 பகுதி 21, 35A யின்படியும் வெவ்வேறு கால கட்டங்களில் மாற்றி அமைக்கப்பட்ட சுற்றறிக்கை DBOD.No.Dir.BC.151/C 347-85 நாள் டிசம்பர் 27, 1985இன்படியும் பொது மக்கள் நலன் கருதி பாரா 11 (b) கீழே கண்டவாறு மாற்றி அமைக்கப்படுகிறது.

1) பிராதான கடன் வட்டி விகிதத்திற்குச் சம்பந்தமில்லாமல் தங்கள் விருப்பம்போல் ரூபாய் 2 லட்சத்திற்கு உட்பட்ட கடன்களுக்கான வட்டியை வங்கிகளே தீர்மானித்துக் கொள்ளலாம்.

2) ரூபாய் 2 லட்சத்திற்கும் அதிகமான கடன்கள் மீதான வட்டி விகிதங்கள் ரிசர்வ் வங்கி அவ்வப்போது வெளியிடும் கடன்கள் மீதான வட்டி விகிதங்களுக்குட்பட்டே இருக்க வேண்டும்

1985 டிசம்பர் 27 சுற்றறிக்கையின் இதர பகுதிகளில் எந்தவித மாற்றமும் இல்லை.

G.P. முனியப்பன்
செயல் இயக்குநர்

DBOD.No.Dir. BC.152/13.03.00/2000 மார்ச் 23, 2000

<u>அயல்நாட்டு நாணயம் (குடியிருப்போர் அல்லாதோரின்) கணக்கு (வங்கிகள்) முறை</u>

வங்கிகள் ஒழுங்குமுறைச் சட்டம் 1949 பகுதி 21, 35Aயின்படியும் பொது மக்கள் நலன் கருதி வெவ்வேறு கால கட்டங்களில் மாற்றி அமைக்கப்பட்ட சுற்றறிக்கை DBOD.No.Dir. BC.115/13/01.09/93 நாள் ஏப்ரல் 29, 1993 பிரிவு (viii) (b) மாற்றி அமைக்கப்படடு கீழே கண்டவை சேர்த்துக் கொள்ளப்படுகிறது.

மேலே சொல்லப்பட்ட பிரிவு (a) யில் உள்ள வைப்புத்தொகை அல்லாத கால-வைப்புக்கு கடனுக்கு

1. பிராதான கடன் வட்டி விகிதத்திற்குச் சம்பந்தமில்லாமல் தங்கள் விருப்பம்போல் ரூபாய் 2 லட்சத்திற்கு உட்பட்ட கடன்களுக்கான வட்டியை வங்கிகளே தீர்மானித்துக் கொள்ளலாம்.

2. ரூபாய் 2 லட்சத்திற்கும் அதிகமான கடன்கள் மீதான வட்டி விகிதங்கள் ரிசர்வ் வங்கி அவ்வப்போது வெளியிடும் கடன்கள் மீதான வட்டி விகிதங்களுக்குட்பட்டே இருக்க வேண்டும்

1993 ஏப்ரல் 29 நாளிட்ட DBOD.BC.115/13.01.09/1993 கூறப்பட்டிருக்கும் மற்ற அறிவுரைகளில் எந்தவித மாற்றமும் இல்லை.

G.P. முனியப்பன்
செயல் இயக்குநர்

**சிறுப்பகுதி எண் 10**

**அறிவுரைத் தொகுப்பு பாகம் 9**

**DBOD.DBS.ECD.No.Dir. BC.151, 2000**

**9.VI.1(ii)(b)**

மேலே சொல்லப்பட்ட பிரிவு (a) யில் உள்ள வைப்புத்தொகை அல்லாத கால-வைப்புக்கு கடனுக்கு

i. பிராதான கடன் வட்டி விகிதத்திற்குச் சம்பந்தமில்லாமல் தங்கள் விருப்பம்போல் ரூபாய் 2 லட்சத்திற்கு உட்பட்ட கடன்களுக்கான வட்டியை வங்கிகளே தீர்மானித்துக் கொள்ளலாம்.

ii. ரூபாய் 2 லட்சத்திற்கும் அதிகமான கடன்கள் மீதான வட்டி விகிதங்கள் ரிசர்வ் வங்கி அவ்வப்போது வெளியிடும் கடன்கள் மீதான வட்டி விகிதங்களுக்குட்பட்டே இருக்க வேண்டும்

சிறுப்பகுதி எண் 11

**9 . VI. 2 .(ii) (b)**

மேலே சொல்லப்பட்ட பிரிவு (a) யில் உள்ள வைப்புத்தொகை அல்லாத கால-வைப்புக்கு கடனுக்கு

1. பிராதான கடன் வட்டி விகிதத்திற்குச் சம்பந்தமில்லாமல் தங்கள் விருப்பம்போல் ரூபாய் 2 லட்சத்திற்கு உட்பட்ட கடன்களுக்கான வட்டியை வங்கிகளே தீர்மானித்துக் கொள்ளலாம்.
2. ரூபாய் 2 லட்சத்திற்கும் அதிகமான கடன்கள் மீதான வட்டி விகிதங்கள் ரிசர்வ் வங்கி அவ்வப்போது வெளியிடும் கடன்கள் மீதான வட்டி விகிதங்களுக்குட்பட்டே இருக்க வேண்டும்.

**9 . VI.2.(iii) (b)**

மேலே சொல்லப்பட்ட பிரிவு (a) யில் உள்ள வைப்புத்தொகை அல்லாத கால-வைப்புக்கு கடனுக்கு

i. பிராதான கடன் வட்டி விகிதத்திற்குச் சம்பந்தமில்லாமல் தங்கள் விருப்பம்போல் ரூபாய் 2 லட்சத்திற்கு உட்பட்ட கடன்களுக்கான வட்டியை வங்கிகளே தீர்மானித்துக் கொள்ளலாம்.

ii. ரூபாய் 2 லட்சத்திற்கும் அதிகமான கடன்கள் மீதான வட்டி விகிதங்கள் ரிசர்வ் வங்கி அவ்வப்போது வெளியிடும் கடன்கள் மீதான வட்டி விகிதங்களுக்குட்பட்டே இருக்க வேண்டும்.